**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 27.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 8957/E/2018**

திரு R.சுப்ரமணி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
துறையூர், திருச்சி மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 26.07.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 18.09.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 27.11.2018 |

******

**ஆணை**

இன்று (27.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு R.சுப்ரமணி ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு R.செந்தில், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், துறையூர், திருச்சி மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 26.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் வறட்சி நிவாரண நிதிக்காக தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் மற்றும் அவர்கள் குறித்த விபரங்கள், இதுகுறித்து வட்டாட்சியர்கள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய இறுதி பயனாளிகள் பட்டியல் மற்றும் பரிந்துறை கடித நகல்கள், வறட்சி நிவாரண நிதி வழங்குதலில் நில உரிமையாளர் அல்லது குத்தகைதாரருக்கு

வழங்கப்பட்டிருப்பின் அவர்கள் குறித்த விபரம் அடங்கிய ஆவண நகல்கள், வறட்சி நிவாரண நிதி குத்தகைதாரருக்கு வழங்கப்பட்டிருப்பின் குத்தகைத்தாரருக்கான தகுதி மற்றும் குத்தகைதாரரை உறுதி செய்யும் பொருட்டு சரிபார்க்கப்பட்ட ஆவண நகல்கள், பட்டியலில் உள்ள வருவாய் கிராமங்களின் வறட்சி நிவாரண நிதிக்கு தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் புல எண், விஸ்தீரணம் சாகுபடி விபரம், வழங்கப்பட்ட நிவாரண தொகை வங்கி கணக்கு எண் போன்ற விபரங்கள் அடங்கிய பட்டியல் நகல்கள் என 4 இனங்களில் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், துறையூர் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 18.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், துறையூர் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 08.10.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 27.11.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (27.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 08.10.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. விசாரணையின் போது மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்று தெரிவித்தார். இதுகுறித்து, இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவிய போது, மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய தகவல்களை 15 தினங்களில் வழங்குவதாக எழுத்துமூலமாகத் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்து விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது.

**மேல்முறையீட்டாளர் 26.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**வழக்கு எண்.SA 8957/E/2018**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
துறையூர், திருச்சி மாவட்டம்.

**மனுதாரர்**

திரு R.சுப்பிரமணி,
த/பெ. ராமநாதன்,
அட்டாளப்பட்டி, மேட்டுப்பட்டி அஞ்சல்,
முசிறி வட்டம்,
திருச்சி மாவட்டம்.

Copy to: Judgement File.
*"VP / PA -03.10.19"*